## பெறாபர்(beraber) குழுவின் தொழில் என்ன?

வெளிநாட்டுப் பிள்ளைகள் மற்றும் இளம் வயதினருக்கு நாம் ஊக்குவிப்பு-முன்னேற்ற வகுப்புகளை வழங்குகிறோம். மாணவ மாணவியர் 10க்கும் 20க்கும் இடைப்பட்ட வயதினராக இருக்கவேண்டும். சகல வகுப்புப் பாடங்களும் கற்பிக்கப்படும். ஊக்குவிப்பு-முன்னேற்ற வகுப்புகள் மட்டுமல்லாது சமூகப்பிரச்சினைகள் மற்றும் தொழிற்கல்வித்தெரிவு, பாடசாலை மாற்றம் போன்றவற்றுக்கும் உதவுவோம். எங்கள் குறிக்கோளாவது மாணவ மாணவியருக்கு ஒருங்கிணைவை ஏற்படுத்திச் சமூகத்தில் சரியான இடம் பிடிப்பதற்கு உதவுவதாகும்.

## கற்பிப்பது யார்?

பல்கலைக்கழகத்தில் அல்லது உயர்தொழிற்கல்லூரியில் படிப்போர் கற்பிப்பார்கள். வரும் சகல மாணவ மாணவியரின் தனிப்பட்ட சிக்கல்களுக்குப் பொருத்தமான ஆசிரியரை ஒழுங்கு செய்ய முயற்சிப்போம்.

## பெறாபரில் கற்பதற்குரிய கட்டணம் என்ன?

தனியாக அல்லது குழுவாகக் (இரண்டு மாணவ மாணவியர் அதாவது சகோதரங்கள் அல்லது ஒரே வகுப்புமாணவர்களுக்கு எப்படியாயினும் ஒரே சிக்கலைக் கொண்டவர்கள்) கற்பிப்போம். மாணவ மாணவியருக்கு ஒரு வாரத்தில் ஆகக்கூடியது இரண்டு மணிநேரங்கள் கற்பிக்கப்படும். தனியாகக் கற்பிப்பின் மணித்தியாலத்துக்கு 20 சுவிஸ் பிராங்குகளும், குழுவாகக்கற்பிப்பின் ஒரு பிள்ளைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 12.50 சுவிஸ் பிராங்குகளும் அறவிடப்படும்.

## எங்கே கற்பிக்கப்படும்?

வழமையில் மாணவ மாணவியரின் வீட்டிற்தான் கற்பிக்கப்படும். சில ஆசிரியர்கள் தங்கள் வீட்டிலும் வைத்துக் கற்பிக்கக்கூடும். எப்படியாயினும் பெற்றோருடன் இதுபற்றிக் கதைக்கப்படும்.

## எப்படிப் பதிவு செய்து கொள்ளலாம்?

எமது இணையத்தள முகவரி www.beraber.ch -->Anmeldung -->als Schüler anmelden.
எந்த நகரத்தில் (பாசல், சூரிச், போ்ண்) கற்பிக்கப்படவேண்டும் என்பதைத் தெரிவு செய்யுங்கள்.

## இணையத்தளம் மூலம் பதிவு செய்தபின் அடுத்த படி என்ன?

உங்களுக்குப் பொருத்தமான ஆசிரியரை நாம் தெரிவு செய்தவுடன் உங்களுடன் தொடர்பு கொண்டு எமது அலுவலகத்திற்கு உங்களைக் கதைப்பதற்காக வரவழைப்போம்.

எக்கட்டத்திலும் மின்னஞ்சல் (E-mail)மூலம் மேலதிக கேள்விகளுக்குப் பதிலளிப்போம்.

அன்புடன்
பெறாபர் குழு